தனிப்பிரதி 1 அணா ஆண்டு சந்தா ரூ. 5. REGD. NO. M. 4455.

# திராவிடநாடு

ஞாயிறு வெளியீடு.

ஆசிரியர்
C. N. அண்ணாதுரை M. A.,

"நாணு மூடவழக்கம் நாடுதல் பெரிதா?
நல்லறிவென்னும் வழிச் செல்லுதல் பெரிதா?"
[கவி பாரதி தாசன்]

மலர் 1. ‖ காஞ்சிபுரம் 16—8—42 சித்திரபானு—ஆடி 32—ஞாயிறு ‖ இதழ் 24.

## இஞ்சிபத்தனே மேல்!

பரதன்.

பாண்டியனின் தேவியின் காற்சிலம்பைக் களவாடுகிறான் பொற்கொல்லன், வஞ்சிபத்தன், வஞ்சிபத்தனின் குமரியையே களவாடுகிறான் இஞ்சிபத்தன்! இவன்செய்யும் மற்றோர்செயல், மிகச்சாதாரணமானது அவனுடைய மொழிப்படி! கொடுப்பது பொன் பெறுவது பித்தளை! அவனிடம் பொன் கொடுப்போர் பித்தளைதான் பெறுகிறார்கள். அத்தகைய புரட்டிலே புரளுகிறான் இஞ்சிபத்தன்! விலாசமென்னவென்று கேட்காதீர்கள். நிஜத்திலல்ல இஞ்சிபத்தன், சினிமாப் படத்தில் கண்ணகியில்!

இந்த இஞ்சிபத்தன் காமிக் ஏன் புகுத்தப்பட்டது என்று கொஞ்சநேரம் யோசித்தேன், பிறகு தெளிவாக எனக்கு அதன்காரணம் விளங்கிவிட்டது. இஞ்சிபத்தன் பொன் பெற்று, கொடுத்தோருக்குப் பித்தளையைத்தந்தது தான், கண்ணகி படக்காட்சியின், சூட்சமத்தை விளக்கும் யுக்தி என்று கண்டு கொண்டேன்.

சேரன் செங்குட்டுவனின் தம்பி, இளங்கோவடிகள், செந்தமிழில், இயற்றிய சிலப்பதிகாரம் எனும் பொன், இளங்கோவன் எனும் புனைபெயர் பூண்ட தோழரால், பித்தளையாக்கப்பட்டிருக்கிறது! சிலப்பதிகாரச் செம்பொன்னை, சினிமாக்கதை யெனும் பித்தளை யாக்கிய இளங்கோவன், பொன்னைப் பித்தளையாக மாற்றித்தரும் பொற்கொல்லன் காமிக் மூலம், தம்மை அறிமுகப்படுத்திக்கொள்கிறார், என்னே பரிதாபம்!

கதை, சிலப்பதிகாரத்தைத் தழுவியது என்று விளம்பரப்படுத்தப் பட்டிருக்கிறதே அதையேனும் மாற்றிவிடவேண்டும், இல்லையேல் தோழராவது இளங்கோவன் எனும் தமதுபெயரை மாற்றிக்கொள்ள வேண்டும். இரண்டிலொன்று நடவாமுன்னம் நான் என்கருத்தை மாற்றிக்கொள்வதற்கில்லை என்பதைக் கூறித்தான் ஆகவேண்டி இருக்கிறது.

இளங்கோவன், உயிர்ததும்பும், உணர்ச்சிபொங்கும் உரை எழுதவல்லாத வெறும் எழுத்துக்கோர்வைக்காரராக இருப்பின், நான், பொருட்படுத்தியிருக்கவேமாட்டேன், இந்தக்குறை கூறலைத்துவக்கியுமிரேன். எத்தனையோ குப்பையிலே இதுவுமொன்று, சொத்தை பிடித்த அத்திபழத்திலே எந்தப்பாகத்தை நல்லதென்று கொள்ளமுடியும் என்றெண்ணி இருந்திருப்பேன். ஆனால், இளங்கோவன், சினிமா உலகத்திலும், செந்தமிழும், உயிர்நடையும் இருக்கமுடியும் என்பதையும், உரையாடலை ஊரார் ரசிக்கமுடியுமென்பதையும் மெய்ப்பித்தவர். எனவேதான், அவர்மீது, இம்முறை அவர் கண்ணகி கதை கோர்த்ததிலும், உரையாடல் தீட்டியதிலும், நான் குறைகாணவும், கண்டிக்கவும் முனைகிறேன். அவர் எழுத்து, தமிழகத்துக்குப் பயன்பட வேண்டுமென்பதற்காகவே, அவர் கொண்டுள்ள மனமாசு போக்கமுயல்கிறேன் அதிலே நான் வெற்றிபெற்றாலும் பெறுமற் போனாலும், நீங்கள் விஷய விளக்கம் பெறுவீர்கள், அதுபோதும் எனக்கு!

"மாதவியா! கண்ணகியா!! மாதவியானால் மடிமேல்வா கண்ணகியானால் கடுகிப்போ!" என்று, சங்கீதக்கோவலன், ஆர்மோனியக்காரரை முறைத்து, தபேலாக்காரரைக் காய்ந்து, சபையோர்முன் கைகூப்பி நின்று கதறுவதும், மாதவி கோவலனைப் படாதபாடு படுத்துவதும், கோவலன் செய்துதந்த தங்கச்சிலை, மாதவியை விளக்குமாறு கொண்டு அடிப்பதுமாக, காட்டப்படும், கர்ணகடூரமும் கண்ணுக்குப்புண்ணுமாக இருக்கும், நாடகம். அந்த ஆபாசத்தை எண்ணுந்தோறும் மனம் வேகாதிருப்பதில்லை. எத்தகைய பாத்திரம் மாதவி, இளங்கோவடிகளின் சித்திரத் தமிழிலே! எவ்வளவு இழிந்தகுணத்தின் இருப்பிடமாக்கப்படுகிறாள் நாடகமேடையிலே!!

இசைவல்லவள், ஆடலழகி, அபரஞ்சிப்பதுமை உயிர்பெற்றதன்ன அமைப்பினள், நற்குணங்கள் கொண்டவள், கலையின் மணம், மாதவி! கோவலன் மீது அவள் கொண்ட காதல், காசுக்காக அல்ல! கோவலன் கொலையுண்டது கேட்டதும், துறவுபூண்டு விடுகிறாள், தாயுள்ளம் படைத்த அத்தோகையாள்! உலகம் போற்றும், மணிமேகலையைப் பெற்ற மணி வயிறுபடைத்தவள் மாதவி! அத்தகைய மாசிலாமணி, நாடகமேடையிலே, மோசக்காரியாக, நயவஞ்சகியாக, குடிகேடியாக, கோணற் குணங்கொண்டோளாக, பணம் பறிக்கும் பேயாக, அன்பு என்பதையே அறியாத அக்ரமக்காரியாக, கோவலனைக்கொடுமை செய்து விரட்டிடும் விபசாரியாகக் காட்டி, மக்களின் மனதிலே மாதவி என்றதும், வெறுப்பும் கோபமும், கேலியும் கண்டனமும் பிறக்குமாறு செய்தனர், நாடகங்களை

நடத்தியவர்கள். சிலப்பதிகாரத்தைச் சித்திரவதை செய்து விட்டனர். மலர் முகத்தவளை மந்திமுகத்தினளாக்கி, புன்சிரிப்புக்காரியை முகாரி குடிகொண்ட முகத்தோளாக்கிடும், கோரம்போன்றது, அவர்கள் செய்த கலைக்கொலை! தாசியின் மோசத்தை விளக்குவதையா, இளங்கோவடிகள் கருத்தாக அமைத்தார் தமது சீரியநூலிலே! இல்லையே! எத்துணை உயர்தரமான கருத்துக்களை உள்ளடக்கியது சிலப்பதிகாரம்!! அதனை நாடகக்காரர்கள் எவ்வளவு கெடுக்கவேண்டுமோ அவ்வளவு கெடுத்து வைத்தனர்.

இந்தக் கலைக்கொலை, கண்ணகி படத்திலேஇராது என்றே நான் எண்ணினேன்! என் எண்ணத்தை ஈடேற்ற முடியாது என்றுரைத்து விட்டார் இளங்கோவன்—பழயவரல்ல, புதியவர். மாதவியை, நாடக மேடையிலே சித்தரிப்பதுபோலச் செய்யவில்லை. அதுவரை மகிழ்ச்சியே! ஆனால், இவர் தீட்டிடும் கதையிலும், மாதவியின் நடனம், மாலை வீசு படலம், கழுத்தில் விழுந்த மாலை கழற்ற முடியாது கோவலன் கஷ்டப்படுவது ஆகிய காட்சிகள் உள்ளன. நான் கேட்கிறேன், இதுசிலப்பதிகாரமா? என்று நாடகமேடைக் கோவலனுக்கும் நண்பர் தீட்டியதற்கும், அதிக வித்தியாசமில்லையே இதற்கு இவரின் எழுத்துப் பயன்படுவதுகண்ட நான், யாரை நோவது என்று தெரியாது தவிக்கிறேன்.

கண்ணகி ஒரு பத்தினி! மாதவி பரத்தை, ஆனால் அன்பு வயப்பட்டு, ஆழ்ந்த காதலால் கோவலனை அபிஷேகித்த அருங்குணவதி. பாண்டியன் நெடுஞ்செழியனின் மனைவி, கணவன் இறந்தது கண்டு மனம் உடைந்து மாண்ட மற்றோர் பத்தினி, இத்தகைய மூவரின், முக்குண விளக்கச் சித்திரம் சிலப்பதிகாரம்.

அவர் மாண்டபின் எனக்கேன் வாழ்வு! எனக்கு ஏது இன்பம்? எனக்கு எதற்கு அலங்காரம்? என்றாள் மாதவி.

மன்னன் மாண்டபின் மாநிலத்தில் நானிருப்பது முடியுமோ, முறையாகுமோ, அவர்சென்றவழி நானும் செல்வேன், என்று கதறுகிறாள் கோப்பெருந்தேவி, பாண்டியனின் மனைவி.

அவர் இறந்தாரா? அவரைக் கொன்றார்களா பழிக்குப்பழி! இரத்தத்துக்கு இரத்தம், என்று கர்ஜனை புரிந்து, கணவன் கள்வனல்ல, கள்வனென்றுரைத்த மன்னனின் கோல் செங்கோலல்ல, என்பதை உலகுக்கு உணர்த்திய வீராங்கனை, கண்ணகி.

இளங்கோ வடிகள் தீட்டிய இம் முப்பெரும் மாதர்களின் இயல்புகள் எவ்வளவோ பாடங்களை உலகினோர் உணரவைக்க உதவுகின்றனர். ஆனால், க்ண்ணகி படத்தைக் கண்டவர்கள், என்ன பாடத்தைப் பெறமுடியும் என்று என்னைக்கேட்டால், நமது குடும்பங்களே பரவாயில்லை, ஆண்டவன் குடும்பத்திலே இருப்பதோ ஓயாததொல்லை, அதன் பயனாக மானிடர் படும்பாடு கொஞ்சமில்லை, ஆகவே உலகினோரின் கஷ்டம் குறையவேண்டுமானால், கடவுளின் குடும்பக்கோளாறுதீரவேண்டும், என்றஇவைகள் தான்!

கோவலன் வெட்டுண்டதும், பாண்டியன் கோல் கெட்டதும், கண்ணகி கஷ்டப்பட்டதும்,இன்னோரன்ன பிற இடுக்கண்கள் நேரிடக் காரணம் என்ன? இளங்கோவன் தீட்டியுள்ள கதையின்படி பார்த்தால், இவ்வளவு தொல்லைக்கும் துயருக்கும் காரணம் பரமசிவன் குடும்பத்திலே நேரிட்ட ஒருவம்புதான்! கடவுள் வீட்டு வம்பு, கோவலன் உயிருகுடிக்கும் பாம்பாகிறது! இதனை எந்தவிதமான நீதியிலே, சேர்ப்பதோ நானறியேன் தோழர்களே!

அன்றோர் நாள், அரன், உமையும், குமாரர்களும் காண, தாண்டவமாடிக்கொண்டிருந்தார். தாண்டவத்தைக்கண்டு விநாயகரும் முருகரும் "சபாஷ்" கூறுகின்றனர். பார்வதிக்கோ பொறாமை மேலிடுகிறது.

இதென்ன பரதா! கடவுளுக்குமா பொறாமைக் குணம் உண்டு? அதிலும் கணவனின் கீர்த்திகண்டு மனைவி பொறாமைப்படுவது, மும்மலம் நீங்கப்பெறாத, முற்றறிவுகிட்டாத, மூலப்பொருளைச் சேவித்தே மோட்ச சாம்ராஜ்யம் செல்லவேண்டிய, சாமான்ய மக்களுக்குள்ளேயே இராதே, முழுமுதற்கடவுளின் மனைவிக்கு அவருடைய தாண்டவத்தைக்கண்டு பொறாமை உண்டாகிவிட்டது என்றுரைக்கிறாயே! கடவுளின் இலட்சணம் இதுவா?—என்று என்னைக் கேட்காதீர்கள். நான், இளங்கோவன் தீட்டியுள்ளதைத் தீட்டி, உம்மிடம் நீட்டுகிறேன், கைச்சரக்கைக் காட்டினேனில்லை. சிலசமயங்களிலே நான் எண்ணிக்கொள்வதுண்டு, நல்லவேளையாக நாம்மானிடக் குடும்பத்திலே பிறந்தோம், தேவகுடும்பத்திலே பிறந்திருந்தால் என்னென்ன பட்டிருப்போமோ, எத்தனை ஆபாச ஆட்டங்கள் ஆடியிருக்கவேண்டுமோ, என்று. அவ்வளவு கோளாறுகள், கோணற்சேட்டைகள் தேவ குடும்பங்க்ளிலே, ரிஷி ஆஸ்ரமங்களிலே, தபோதனர்களின் பர்ணசாலைகளிளே, கைலாயம், வைகுந்தம், பிரம்மலோகம் ஆகிய இடங்களிலே நடந்தனவென்று, நமது புராணீகர்களின் வாக்கினாலே தெரிந்துகொள்கிறோம். புராணங்களிலே காணப்படுவது போன்ற, அக்ரம நடத்தைகளை, இங்கு ரஸ்புட்டீன்செய்திருக்க முடியாது ஆல்கபோன் செய்திருக்கமுடியாது, எத்தகைய காமுகனும் செய்திருக்கமுடியாது, நான் நாத்தீகம் பேசவில்லை நண்பர்களே! ஆத்தீகம் பேசுபவர், அளந்து கொட்டுகிறார்களே, அவற்றின் ஆபாசத்தை அறிந்தோர், அவ்விதமான ஆபாசலோகத்திலே பிறவாமல், இங்கு பிறந்தோமே என்று எண்ணி அகமகிழ்வர் என்றேகூறுகிறேன். பாருங்கள், காமக்குரோத, மதமாச்சரியாதிகளையும் ராகத்துவேஷர்களையும், இந்திரியச் சேட்டைகளையும், கடந்த நிலையே, யோகிகளும்.: தபோதனர்களும், ரிஷிகளும்மகான்களும், மகாத்மாக்களும்' வேண்டுகின்றனர். இதற்காக நீரிலே நின்றுதவஞ்செய்தோர், நெருப்பிலேபடுத்துதவஞ்செய்தோர், தலைகீழாக நின்று தவம்புரிந்தோர், ஊசிமுனையின்மேல் நின்று ஓங்காரச் சொரூபத்தைக் காண தவமியற்றினோர், சதையை அறுத்து யாகத்தீயிலே இட்டோர், என்று எத்தனை எத்தனையோ விதமான கோரமான தவங்களைச்செய்தனர். என்று புராண இதிகாசாதிகள் புகல்கின்றன. இவ்வளவு கடுந்தவமியற்றி, தேவலோக வாசம் பெறுகின்றனர். ஆனால் அங்குபோன பிறகு, எத்தகைய வாழ்க்கை! அதே புராணாதிகள் தேவவாழ்க்கையையும், அதனால் ஏற்படும் வக்கிர வரலாறுகளையும், கூறுவதைக்கூர்ந்து நோக்குவோர், எந்தக்காமக் குரோத மதமாச்சரியாதிகளையும் இந்திரிய சேட்டைகளையும் விடுத்ததால், தேவலோக வாசம் கிடைத்ததோ, அதேபேர் வழிகள், மதனலீலா விநோதர்களாகவும், ராஜதந்திர நிபுணர்களாகவும், காமுகர்களாகவும், கபட வேடதாரிகளாகவுமே வாழ்கின்றனர் என்பதையே காட்டுகிறது. இது பொறுத்தமானதாகுமா என்று உமது பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து பாருங்கள். அக்ரமமான கதைகளய்யா, தேவலோகத்து நடவடிக்கைகள்!

"ஏடா! பிரமனே! உனக்கு அவ்வளவு கர்வமா. உன் தலையிலே ஒன்றைக்கிள்ளி விடுகிறேன் பார்" என்று சிவனார் சினந்துகூறி, பிரமனின் சிரத்தைக் கொய்தது, எங்கே என்று எண்ணுகிறீர்கள்? பாபாத்மாக்கள், பாமரர், வினையின் விளையாட்டுக்கருவிகள், கசடர் என்று கூறப்படும் மக்கள் வாழும் இந்தமாநிலத்திலே நடந்ததல்ல! சகலமும் உணர்ந்து, சராசரத்தைப்படைத்து, எங்கும் நிறைந்து, எதற்கும் காரணமாகி, எந்தக்காரியத்துக்கும் பொறுப்பாகி

(9-ம் பக்கம் பார்க்க)

பெண்வேண்டியோ, பொன்கோரியோ, கலிங்கநாட்டின் மீது போர் தொடுக்கவில்லை. சோழவளநாடு சோறுடைத்து! நமது மணிமாடங்களிலே தேனிடையூறியச் செம்பவள இதழ்ச் சேயிழையார் தத்தமது காதலருடன் தென்றலையும் திங்களையும் வென்று, வாழ்கின்றனர். மண் பெண், பொன் எனும் மூன்றிர்க்கல்ல இப்போர், மானத்திற்கு! ஆம்! தமிழகத்தின் எல்லையிலே உள்ள ஓர் கொல்லை கலிங்கம்! புன்னகைப் பூந்தோட்டமல்ல! செந்தமிழ் செழிக்கும் சோலையுமல்ல! ஆனால், கலிங்கன், கப்பம் தரமறுக்கிறான்! என் உயிர் போகா முன்னம், உமது குருதியில் வீரம் குதித்தாடுவது நிற்கா முன்னம், தமிழகத்தின் கீர்த்தி குறையாமுன்னம், கலிங்கனோ, கடம்பனோ, வங்கனோ, எவனோ, திரை தரமறுக்கிறான் எனில், நமது மானத்தை மாய்க்க முனைகிறான் என்றே பொருள். மூவேந்தரிலே மற்றையோர் என்ன எண்ணுவர்! மேலே, கங்கைக் கரையிலே உலவும் ஆரியர்கள் எவ்வளவு கேலிசெய்வர்! குலோத்துங்கனின் நாட்கள் குறுகிவிட்டன என்று கொக்கரிப்பர். சோழமண்டலத்திலே, போர்வீரர்கள் கூட்டம், கூனிவிட்டது என்று கூவுவர்! உண்மை நிலை அதுவா! ஓவியமரமா நாம்! போர்த்திறம் இழந்தோமா? தோள்வலியும் மனவலியும் இழந்தோமா! முன்னோரின் புகழுக்கு நாம் மாசுகளா! முதுமொழிகளுக்குக் கரையான்களா! ஆண்மையற்ற கூட்டமா? அஞ்சிவாழும் ஆமைகளா! நயவஞ்சக நரிகளா! நாம் எறுகள்! நாம் தமிழர்! கொலைவாளைத் தூக்குவோம், கொடுமை களைவோம்! மாற்றானின் ஆயுதங்களை நமது மார்பெனும் மதிலிலே வீசச்செய்து மகிழ்வோம். வீரப்போரிலே, வெற்றி காண்போம், வீழ்ந்தாலோ, புகழ் தழுவும் பேறு பெறுவோம். மறத்தமிழரே, கலிங்கநாட்டு மன்னன் மீது போர்தொடுத்தாகி விட்டது. உமது குருதியைக் கொட்ட, உடலைக் களத்திலே வீழ்த்த, அச்சாரம் வாங்கிவிட்டேன். ஆண்மையாளரே! சின்னாட்கள், சிங்காரத் தமிழகத்தை, உங்கள் செல்வக் குடும்பத்தை, காதலை, கவிதையை, காட்சியை, மறந்து பிரிந்திருங்கள். வானமே கூடாரம்! தரையே பஞ்சணை, ஆயுதங்களே தோழர்கள், கானூறே காதலி, போரே, சரசம், இதுவே உங்கள் வாழ்க்கையாகக் கொள்ளுங்கள். போரிடத்துணிவு பிறவாதவரே, ஒதுங்கி நில்லுங்கள் எவரேனுமிருப்பின். அவர்கள்மீது நான் காயேன். உறையூர்போகச் செலவுதருவேன். கோழைகள் வீரர்கள் கூட்டத்திலே இருத்தல் கூடாது, பதரும் மணியும் கலத்தல்வேண்டாம்! வீரர்களே, இன்றே துணிந்து கூறுங்கள், போருக்குத் தயாரா! “என்று மன்னன் உருக்கமாகப் பேசிக் கேட்டான். “தயார்! தயார்! தயார்!” என்று வீரர்கள் முழக்கம் செய்தனர். மன்னவன் சிரித்தான்.

“மகிழ்ந்தேன்! வீரர்களே, உம்மை வாழ்த்துகிறேன். கலிங்கம் சென்று, வென்று, வாகைசூடி வருமளவும், நான் காஞ்சியிலேயே தங்கிஇருக்க முடிவு செய்துள்ளேன். உங்களை விட்டுப் பிரிந்துள்ள, காதலிகளின் கண்கள் கக்கும் கனலினின்றும் தப்பவே, நான் உறையூர் போகாது, இங்கிருக்க எண்ணுகிறேன்” என்று மன்னனுரைத்திட, வீரர்கள் மகிழ்ந்தனர்.

வீரமணி, மன்னனை வணங்கி, “மன்னரே, மங்கையரின் விழிகளிலே கனல்கக்கு மென்றீர்கள், உண்மையே, ஆனால், காதலில் கட்டுண்டோ, கிலியால் தாக்குண்டோ, வீரர்கள் களம் புகாது, கட்டிலறை நோக்கி நடந்திடின், தமிழ் அணங்குகள்,” இத்தகைய கோழையையா நான் பெற்றேன் மணாளனாக, ‘என்று கூறிக் கண்களில் புனல் சோர நிற்பர்” என்றான்.

மன்னன், “வீரமணி, மாதர்விழிபற்றிய ஆராய்ச்சியை மெத்த நுணுக்கமாகக் கண்டுள்ளானே,” என்று கூறிட, வீரமணி வெட்கித் தலைகுனிந்தான். அதே வேளையில், நடனராணியும், வெட்கித் தலைகுனிந்து இருந்தாள், அரண்மனையிலே! (தொடரும்)

# தமிழகம்

(இராகம்—கல்யாணி  தாளம்—ஆதி )

(மானிலவாழ்வு பெரும் ஆனந்தம் என்ற அசோக்குமார் பாட்டு மெட்டு)

பல்லவி.

தமிழகம் தமிழரின் தாயகமே
கமழும் பூவினில் நறுமணமே (தமிழ்)

அநு பல்லவி.

புவி மகிழ் கவிதனை புகழொடு மாந்தர்
செவிநுகர் குழலிசை பழகிய நம் பழந் (தமிழ்)

சரணம்.

செந்தமிழ் சோலையினுள்—குயிலும்
செந்தாமரை கண்டு இன்புறும்—மயிலும்
சந்ததம் பாடிடும் வஞ்சியர் எழிலும்
சங்க முத்தமிழதை கூறிடும் கிளியும் வாழ் (தமிழ்)

இயற்றியவர்

பெங்களூர். தோழர் பூ பார்த்தசாரதி.

தொடர் கதை

# * கலிங்க ராணி *

—[ சௌமியன். ]—

முன்பு:—குலோத்துங்க சோழன் குமாரியின் சேடி நடனராணிக்கும், குதிரைப் படைத் தலைவன் வீரமணிக்கும் காதல்! மன்னனுடன் மணிவேட்டையாடச் செல்கிறான், பின்னர் கச்சிநகர் சென்றான் மன்னன். கப்பங் கட்டத்தவறிய கலிங்க மன்னன்மீது போர் தொடுக்கப்படுகிறது.

கலிங்க நாட்டு மன்னன், கெடுமதி இருந்தவாறென்னே! தமிழக முழுவதும் தலைவணங்கி நிற்கும் தன்மையினனான நம் மன்னர்மன்னவின் மாண்புகளை அறியாது போயினன். மடத்தனமிக்க மமதைகொண்டான். மண்ணில் அவன் குருதிகொட்டுமென்பதுறுதி! குலோத்துங்கனை எதிர்த்து நின்ற எவரேனும் தோற்காதிருந்ததுண்டோ! வேங்கை சீறிடின் மான்கூட்டம் பிழைக்குமோ! மூண்டுவிடும் பெருநெருப்பிலே பஞ்சு பிழைப்பதுண்டோ. கலிங்கக் காவலின் ஆணவமெனும் வெண்ணை நமது அரசனின் சினமெனும் கனல்பட்டு, உருகிவிடாதோ! ஒரு வேந்தனின் ஆணவத்தின் பயனாக, பாபம், அந்தக் கலிங்க மக்கள் சொல்லொணாக் கஷ்டமனுபவிக்கப் போகிறார்கள். அவர்களின் நகரங்கள் நாசமாக்கப்படும்! வயல்கள் வெளிகளாகும்! மாளிகைகள் மண்மேடுகளாகும்! இந்தக் கலிங்க மன்னன், எவ்வளவு பித்தன்! ஏனோ! வம்பை விலைகொடுத்து வாங்குகிறான். குலோத்துங்கக் கொற்றவனின் தோள்வலியை அறியாதவன்போல், அகத்தை கொண்டு, தான் ரட்சிக்கவேண்டிய மக்களை இம்சைக்கு உள்ளாக்கத் துணிகிறான். என்று காஞ்சியில் மன்னனுடன் வந்திருந்த படையினரில் சிலர் பேச, மற்றவர், போர் வந்தேவிட்டதுபோல் பேசுகிறீரே! மன்னனின் ஓலை போனதும், கலிங்கன் குளிரும் காய்ச்சலும் கொண்டு, திரையுடன் இவண் போந்து "திக்கெட்டும் புகழ்பரப்பிய தீரனே! தமிழகத்தின் ஒளியே! மன்னர்மன்னவா! என்னை மன்னித்தருள்க" என்று வணங்கி விட்டாலோ! என்று வினவினர். நான் கலிங்க நாட்டைக் கண்டிருக்கிறேன். மன்னனின் குணத்தை மக்கள் கூறக்கேட்டுமிருக்கிறேன். மமதையே அந்த மன்னனுக்குத் தோழன், எனவே அவன் மன்னிப்புக் கோரான்! போருக்கே எழுவான்" என்று நரைத்தலையும் வடுநிறம்பிய உடலமும் கொண்டஒரு வயோதிக வீரர் கூறக்கேட்ட மற்றவர், "அங்கனமாயின் நமக்குப் பெருவிருந்துதான், சந்தேகமில்லை" என்றுகூறி, ஆரவாரித்து ஆயுதங்களைத் தூக்கிச் சுழற்றி ஆடினர்.

மன்னன் குலோத்துங்கன், படைத் தலைவன் தொண்டைமானுடன், தனியறையிலே உரையாடிக் கொண்டிருந்தான். கவலைகொண்ட முகத்தினனாக வீரமணி, அந்தஅறையின் வாயற்படியிலே காவல்புரிந்து நின்றான்.

"மன்னவா! இந்தப்போருக்காகத் தாங்கள் நேராகக் களம்புகவேண்டுமோ! நான் செல்வேன் சேனைகளுடன், வெல்வேன் கலிங்கவேந்தனை, உமதுகட்டளை எனும் வில்லுக்கு நான் அம்பு! என்னை எய்தால்போதாதோ" என்று தொண்டைமான் கூறிடக்கேட்டு புன்முறுவல் பூத்த மன்னன்" அங்ஙனமே யாகுக! அஞ்சாநெஞ்சரே, அன்பரே, தேவையான படைபலத்தோடு சென்று வென்று வாரும். கலிங்கனின் காதுகளில் கங்கைக்கரைக்காரரின் கூச்சலே கேட்கிறது. அதனாலேயே அவன், புயலில் குதிக்கத்துணிந்துவிட்டான். அன்றோர்நாள், ஆரியமன்னர்களை சேரன் செங்குட்டுவன் வென்று, சிரமீதில் கல்லேற்றி வந்த சேதியைக் கலிங்கன் மறந்தான் போலும்" என்று மன்னன் கூறினான்.

"உறையூருக்கு ஓலை அனுப்பிவிடுகிறேன். வீரமணி குதிரைப் படைகளைத் தலைமை தாங்குவான். எனது தமயனிடம் கரிப்படையின் பொருப்பிருக்கும். தரைப்படைக்குத் தலைமை நானே கொள்கிறேன்" என்று தொண்டைமான், போர் முறையை விவரிக்க, மன்னன், உலவியபடி, "சேனைத் தலைவரே! உமது யுக்தம்போல் செய்யும். ஆனால் ஒன்று! கலிங்க நாடு மலையரண்கொண்டது. கலிங்க மன்னனின் மமதைக்குக் காரணமும் அதுவேதான்! எனவே மலையரணைத் தூளாக்க, யானைப்படையைச் சற்று அதிகமாகவே கொண்டு செல்லும். மேலும், கலிங்கநாட்டின் மீது, நமது படைகள் தரைமார்க்கமாகப் பாய்வதோடு கடல் மார்க்கமாகவும் நமது சேனைகள் சென்று முற்றுகையிட வேண்டுமாகையால், நமது கப்பற்படையும் தரைப்படை கிளம்பும்போது கிளம்பட்டும். கலிங்கம் அழியட்டும்." என்று கூறினான்.

"தாங்கள் ஆணையை நிறைவேற்றுவேன்" என்று கூறிப்பணிந்து நின்றான் தொண்டைமான். இருவீரரின் முகமும், கோபத்தால் சிவந்திருந்தன. முத்துப்போல் அரும்பிய வியர்வையைத் துடைக்கவும் மனமின்றி மன்னன், நமதுபடைகளை, வெளியிலேகூட்டு நான்சில கூறல் வேண்டும் என்றான்.

சித்திர மண்டபத்தை அடுத்த வெளியிலேபடைகள் அணிவகுத்து நிறுத்தப்பட்டன. தொண்டைமான் வீரமணியை உடனழைத்துக் கொண்டு, குதிரை மீதேறி, அணிவகுப்பை ஒழுங்கு பார்த்தான், படை முழுவதிலும் ஜொலிக்கும் முகங்களும், அவற்றுடன் போட்டியிடும் ஒளிவீசும் ஆயுதங்களுமாக இருந்தன! "இந்தவடு இன்ன களத்திலே உண்டாயிற்று. இன்ன போரிலே இன்னவிதமான வெற்றி நான் கண்டேன்" என்று பழங்கதை பேசி நின்றனர். படைவீரர்கள். வீரமணியின் வாழ்க்கையில் புதிய தோர்நிலைமை, அதாவது குதிரைப் படைக்குத் தலைமை தாங்கும்பேறு கிடைத்ததால், அவன், மிக்க மகிழ்வுடனே விளங்கினான், காதலியைப் பிரிந்திருக்க வேண்டுமே என்ற கவலையையும் மறந்தான்! புதுத் தலைவரைப்பெற்ற குதிரைப்படை வீரர்கள், களித்தனர். குதிரைகள் களம்புகும் காலம் இதுவெனகண்டு கொண்டு கால்களைத்தட்டி நின்றன! கலிங்கவீரர்களின் மார்புகளிலே இந்தக் குளம்புகள் தாண்டவமாடும் எனக்கூறி, குதிரையை வீரர்கள் தட்டிக்கொடுத்தனர் குன்றுகள் பல, வரிசையாக அடுக்கியது போன்ற காட்சிதந்தன கரிவரிசை! அவைகளின் ஆரவாரம், கடலொளிபோன்றிருந்தது.

பேரிகை ஒலித்தது. பேச்சு நின்றது! மன்னவன், ஓர் யானை மீதமர்ந்து, படைவரிசை நடுவே வந்து நின்றான். புன்னகை பூத்தான்! வீரர்களின் முகமெலாம் மலர்ந்தன! "மன்னர் மன்னவன் வாழ்க! தமிழ் மாநிலம் வாழ்க!" என்று வீரர்கள் முழக்கம் செய்தனர்!

"தமிழ் மாநிலம் மாழ்க! உண்மை உரை அது வீரர்காள். தமிழ் மாநிலம் வாழ, அதன் கீர்த்திபரவ, உங்கள் குருதியை பாய்ச்சவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளவே இன்று இங்கு உம்மை அழைத்தேன். மண், பெண், பொன், எனும் மூன்றுக்கும் மாநிலத்திலே போர் மூளுவதுண்டு. நாம், மண்வேண்டியோ,

**இஞ்சிபத்தனே மேல்!** (10-ம் பக்கத் தொடர்ச்சி)

சிலை உண்டானதற்கு, உண்மைக் காரணத்தைக் காட்டினால், எத்தனையோ வீரம்கொண்டெழுந்துள்ள திராவிடருக்கு மேலும் வீரம் உண்டாகுமே, ஆரிய தாசர் அதனை எங்ஙனம் செய்வார் என்று எவரேனும் வாதிடுவரேல் இது கூறுவேன், "உண்மையை உரைக்கும் நெஞ்சுறுதி பிறவாது போயினும், அண்டப்புளுகு கூறாமலாவது இருந்திருக்கலாம்." சிலைக்காட்சியையே விடுத்துவிட்டு, கண்ணகி களைத்து நின்றதோடு முடித்து, அடுத்த காட்சியாக, பல வருடங்களுக்குப் பிறகு என்ற தலைப்புடன், ஒரு கோயிலைக் காட்டி, கண்ணகியின் சிலையைப் பலர் தொழுவதாகக் காட்டி முடித்திருக்கலாம். ஆனால், வேண்டுமென்றே, சிலை சமைத்த விஷயமாக உள்ள ஆரிய—திராவிடக் கிளர்ச்சியை மறைத்து, மாறாக ஒரு புராணம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. தெரிந்து, துணிவாக, தமிழரைத் துச்சமெனக் கருதி, செய்யப்பட்டது இது என்பேன்.

நான் படத்திலே உள்ள மற்றவற்றைக் குறை கூற முன்வரவில்லை. சினிமாத் துறையிலே ஈடுபட்டுள்ளவர்கள் கூறுவர்! கலை விஷயமாகவும், இன விஷயமாகவும் செய்யப்பட்டுள்ள, சகிக்கமுடியாத, மன்னிக்க முடியாத, கொலையை மட்டுமே நான் இங்குக் குறிப்பிட்டேன்.

கோவலனின், "சாந்திமுகூர்த்தத்தன்று" மாதவி நடனம் என்றிருக்கும் ஆபாசத்தையோ, இந்திரவிழாவுக்குக் கோவலனும் மாதவியும் போனபோது, கற்பரசிகளும், வீணையை எடுத்துத்தர வந்த பணிப்பெண் இருவரும் தவிர, விழாவிற்கு வேறு யாரும் வராதிருந்த விந்தையையும், மாதவிக்கு அண்ணனாக ஒரு சாஸ்திரி வந்திருந்து "மாமனாக" இருக்கும் கோரத்தையும், எடுத்துக் கூறுவது என் வேலையாக நான் கொள்ளவில்லை. படத்திலே காணப்படும் இந்தச் சில்லறை ஆபாசங்கள் அத்தனையும், கண்ணகியாக வரும் தோழியர் கண்ணாம்பாவின் நடிப்பிலே, அடித்துத் தள்ளப்படுகிறது. எனவே, படத்தின் மற்றப் பகுதி பற்றியோ, இளங்கோவனின் கதைபற்றியோ குறை கூறேன். ஆனால் இந்த இனக்கொலையை நான் மறவேன்.

ஆம்! நான் அந்தப்படத்தைத் தயாரித்திருந்தால், கதை தீட்டியிருந்தால், ஆரம்பம், எதுவாக இருக்கும்! சிவனும் சக்தியுமா வருவார்கள்! அவர்கள் கைலாயத்திலே இருப்பார்கள், கதையிலே தலைமீது கல் சுமந்துகொண்டுவரும் கனக விசயரைக் காட்டுவேன்! "தமிழ் மன்னனை எதிர்த்ததும் போதும், தலை எரிச்சல் கண்டதும் போதும்" என்று அவர் தளக்கூறச் செய்திருப்பேன். கண்ணகிக்குக் கற்சிலை செய்யும் வரலாறும், அகலிகை கல்லான வரலாறும், ஒப்பிடும் பேச்சை, கனக விசயனுக்கும், தமிழ்க் காவலனுக்கும் நடக்குமாறு செய்வேன்! ஆரியர் கொட்டம் அடக்கப்பட்டதை அகமகிழ எடுத்துரைப்பேன்.

மதுரை தீப்பற்றி எரிந்ததையும், மாயா சக்தி என்றுரைத்திரேன். மன்னன், இருதயத்துடிப்பினால் மாண்டான் என்று கூறுவேன். மன்னனின் மரணத்தையும், கண்ணகியின் கோலத்தையும் கண்டமக்கள், "பொல்லாத வஞ்சிபத்தனாலல்லவா, இவ்வளவும்நேரிட்டது என்று கோபித்து அவன் வீட்டில் தீவைக்க, அதுசமயம் பெருங்காற்று அடித்துத் தீபரவ, பத்தினியின் வாக்கினாலேயே தீ பரவிற்று என்று மக்கள் பயந்தோட, தீ அணைப்பாரற்று, மதுரையே அழிந்தது என்று விளக்கமுரைப்பேன். இத்தகைய மாற்றங்கள் இருக்குமேயன்றி இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரத்தை, சினிமா—அதிகாரம் பெற்றதனால், சித்திரவதை செய்திருக்கமாட்டேன்.

சர்க்கார் நம்மிடமிருப்பின், கண்ணகி படத்திலே, முதல் ரீல், கடைசி ரீல், இரண்டையும் சென்சார் போர்டார் நீக்கிவிட்டிருப்பர் என்றும் கூறுவேன். தமிழரின் முற்காலச் சிறப்பை மறைக்கச் செய்யப்படும் சதி, திரையிலுமா என்று சென்சார் போர்டார் சீறுவர். ஏன் மறைக்க வேண்டும் உண்மையை? என்று கேட்பர்.

பிரபாத் கம்பெனியார் சில ஆண்டுகளுக்குமுன்பு தயாரித்த **அடிவானத்துக் கப்பால்** என்ற படத்திலே **ஆரியர்—அநாரியர்** என்ற விஷயம், ஆரியர் மதத்தின் பேரால் அநாரியரைக் கொடுமைப்படுத்தி வஞ்சித்த வரலாறு, ஆரிய அநாரிய பேதம் காதலை மாய்த்த கோரம், ஆரிய குரு மக்களை ஆட்டிப்படைத்தது ஆகியவற்றை பச்சையாகவே படமெடுத்துக்காட்டினார்கள்! அந்தத் துணிவு, கண்ணகி படமெடுத்தவர்களுக்கு வராமற்போனாலும், திரித்துக்காட்டுவதாவது இல்லாமல் இருக்கக்கூடாதா என்று கேட்கிறேன்.

தமிழரின் துரைத்தனம் இருந்தால் இத்தகைய செயல் நடக்காது என்று நான் கூறுவதை, வீண் மிரட்டல் என்று கருதாதீர். சில ஆண்டுகளுக்கு முன்பு "சிவாஜீ" படக்காட்சியை வடநாட்டிலே தயாரித்தார்கள். சிவாஜியின் வாழ்க்கை காட்டவேண்டிய பாடம், வீரம், உழைப்பு, தந்திரம், தீரம், இறுதியில், வைதிகத்துக்குப் பலியான கோரம், இவைகளே! படமெடுத்தவர்கள், இதற்கு நேர்மாறாக, சிவாஜியின் வெற்றிகளுக்குக் காரணம், ராமதாசர் ஆசீர்வாதம் என்றும், சிவாஜி, ராமதாசரின் பாதபூசை செய்தே பெரிய வெற்றி பெற்றார் என்ற கருத்தைக் கொண்டதாக அக்காட்சியைத் தயாரித்தனர். எங்ஙனம், கண்ணகி படமூலம் பத்தினியின் பண்பு வெளிப்படுவதைவிடச் சக்தி சிவ சம்வாதத்தால் நேரிட்ட சங்கடமே வெளிப்படுகிறதோ அதுபோலவே சிவாஜி படக்காட்சி மூலம், சிவாஜியின் வீரப்பிரதாபம் வெளிப்படுவதைவிட ராமதாசரின் சக்தியே வெளிப்பட்டது. மராட்டியர்கள் இதனைத் தமது இனத்தை இழித்துக்காட்டும் படமெனக் கண்டுகொண்டனர். கிளர்ச்சி நடந்தது. கோலாப்பூர் மன்னர் முன்வந்தார். "இந்தப்படத்தை நமது சமஸ்தானத்திலே கொண்டுவரக்கூடாது" என்று தடை உத்திரவு பிறப்பித்தார். மராட்டியர் இருந்த இடமெங்கும் இந்த உத்திரவு போற்றப்பட்டது. பல இடங்களிலே படத்துக்குக் கண்டனம். படமுதலாளிகள் பட்ட கஷ்ட நஷ்டம் சொல்லிமுடியாது.

கோலாப்பூர் சமஸ்தானம் செய்ததை, தமிழரசு செய்யமுடியாதா? அந்தவாழ்வு எந்தநாள் வரும், என்ற எண்ணமே மேலிடுகிறது, இத்தகைய சமயங்களிலே!

**கண்ணகி** எனும் அந்தத் தமிழ்ப்படக்காட்சியைக் கண்டபிறகு, வஞ்சிபத்தனைவிட இஞ்சிபத்தன், பலே கைகார ஆசாமியாக இருக்கிறார் என்று எண்ணினேன். கதைப்போக்கையும், கலைக்கொலை, இனக்கொலை ஆகியவைகளைக் கண்டபிறகு, இஞ்சிபத்தனே மேல்! இளங்கோவன், செய்ததைவிட, இஞ்சிபத்தன் செய்தது பரவாயில்லை என்றும் எண்ணினேன். என்ன ஆச்சரியம், தமிழ்ப்படநிலைமை இப்படி இருக்கிறது, என் செய்வது!

## ஜஸ்டிஸ் நிர்வாகக்கமிட்டி

9—8—42ல் சென்னை கன்னிமாரா கிளப்பில் நடைபெற்ற ஜஸ்டிஸ் நிர்வாகக் கமிட்டிக்கூட்டம் விசேஷமான முறையுடன் விளங்கிற்று. சர். சண்முகம் வந்திருந்தது தமிழர்களுக்கு மிக்கக்களிப் பூட்டிற்று. பெரியாருக்குத் துணை நின்று சர். சண்முகம் இனி கட்சிப்பணியாற்ற முன்வருவார் என்று தமிழர் எதிர்பார்க்கின்றனர் தமிழகத்திலே சண்முகம் பவனி விரைவிலே நடக்கலாம் என்று தெரிகிறது.

காஞ்சிபுரம் பண்ட்ஸ் Ltd,
காஞ்சிபுரம்
மாதம் ரூ. 25 சம்பளத்தில், நம்பிக்கையும் செல்வாக்குமுடைய ஏஜண்டுகள் ஒவ்வொரு ஊரிலும் தேவை. மற்ற விவரங்களுக்கு 0—1—6 ஸ்டாம்பு அனுப்பவும்.
K. R. CHARY, B. A., Secretary.

திராவிடநாடு

ஞாயிறு] 16—8—42 [காஞ்சி.

# புலியூர் புகுவதா!

காந்தியாரின் சிறைவாசம் இன்று ஐந்தாம் நாள் என்று பாரததேவி 13ந்தேதி கட்டம் அமைத்து எழுத்தலங்காரப் பிரசாரம் பதிப்பித்திருக்கும் பக்கத்திலே, அதை ஒட்டிக்கொண்டுள்ள ஒரு விளம்பரமும் பிரசுரித்திருக்கிறது. **வழக்கப்படி வியாபாரம், சம்பூரண சாஸ்திரியாரின் ஜவுளிக்கடையில்** என்பதாகும் அந்த விளம்பரம். சிறையிலே காந்தியார், கடையிலே சாஸ்திரியார் என்பது இதனால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆம்! காந்தியார் சிறைப்பட்டார் என்பதற்காகக் கனபாடிகள் எவரும் தமது கருமத்தை மறந்துவிடவில்லை. சம்பூரண சாஸ்திரிகள் ஜவுளி வியாபாரத்தை நிறுத்தவில்லை! வழக்கம்போல் வியாபாரம் நடக்கிறது! வழக்கம்போலவே வக்கீல் பார்ப்பனர் கோர்ட்டுகளுக்குப் போகிறார்கள், சட்டம்பேசிப் பணத்தைத் தட்டிப்பார்த்து வாங்கி இட்ட தெய்வத்தை எண்ணி வீடு வருகின்றனர். பார்ப்பன டாக்டர்கள் தமது வைத்திய சாலைகளை மூடிவிடவில்லை. வழக்கப்படி நாடிபார்த்து, அதற்குமுன், வந்தவரின்பணஸ்தானத்தைச் சோதித்து வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். இசைபாடிடும் பார்ப்பனர்கள், காந்தியார் சிறையிலிடப்பட்டாரே என்று ஏங்கி, லாவணி பாடிக்கொண்டில்லை, எப்போதும்போல, இராகத்தை ஆலாபனைசெய்து, பணத்தைப் பாராயணம் செய்து வருகிறார்கள். வழக்கப்படி காப்பி ஓட்டல்களிலே பார்ப்பனர்கள் தமது வேலையைச் செய்கிறார்கள். வழக்கப்படி கோயிலிலே பார்ப்பனர் தமது சஹஸ்ரம நாம அர்ச்சனையைக்கூறி, பக்தர்கள் தந்திடும் காசை வாங்கும் வேலையைச்செய்து கொண்டுதான் வருகிறார்கள். குளத்தருகே வழக்கப்படி பார்ப்பனர்கள் தர்ப்பைக்கட்டும் கையுமாகஇருந்து தமது "தபால் இலாகாவை" நடத்திக்கொண்டுதான் வருகிறார்கள். திதி நடக்கும் தேதியை வழக்கப்படி "ஐயர்" கூறிவிட்டு, வழக்கப்படி தட்சணை தாம்பூலாதிகளையும் காய்கறி இலையையும் பெற்றுக் கொண்டுதான் வருகிறார். பார்ப்பனர்கள், தமது வேலையைப்பரிபூரணமாகச் செய்துகொண்டுதான் வருகிறார்கள்.

பாரததேவியிலேகாணப்படுவதுபோல், "வழக்கப்படி வியாபாரம் நடக்கிறது." யாருடைய வியாபாரம்? அக்கிரகார வியாபாரம்!

வேலை நிறுத்தம் செய்யுங்கள்—கடைகளை மூடுங்கள்—என்றெல்லாம் காங்கிரஸ் கூறுவது கேட்கிறோம், அக்ரகாரம் அதை ஆதரிக்கக் காண்கிறோம், ஏன் ஆதரிக்கிறது என்பீரேல், எந்தச்சமயத்திலும் "வேலை நிறுத்தம்" அவர்களைப் பாதிப்பதில்லை.

கடைகள் மூடினால், நம்மவருக்கு நஷ்டம்—மில்களிலே வேலை நிறுத்தம் ஏற்பட்டால் நம்மவருக்கே கஷ்ட நஷ்டம், பள்ளி பகிஷ்கரிக்கப்பட்டால், நம்மவர்களுக்கே வாழ்க்கை வளைவு! அங்கு, ஏதுவும் அண்டாது! எனவேதான் அக்கிரகாரம் வேலை நிறுத்தங்களை அவ்வளவு 'அன்புடன்' ஆதரிக்கிறது.

1920—21ல் நடைபெற்றது போன்றது நடக்கும் என்று காந்தியர்கள் கூறிவந்தார்கள். அது நடந்துவிட்டது. நாட்டிலே பல இடங்களிலே கலவரம், கல்வீச்சு, கடைகள்மீது மோதுதல், தீயிடல் முதலியன நடைபெற்றுவிட்டன. சர்க்காரும், 1920—21ல் நடந்தது போலவே, தடியடி, கசையடி, துப்பாக்கிப் பிரயோகம் ஆகிய அடக்குமுறையை நடத்துகின்றனர்.

பலர் உயிரிழந்தனர், பலருக்குப் படுகாயம் என்று தினசரிகள் தெரிவித்துள்ளன. பொருள் சேதமும் அதிகம், லாரிகள் கொளுத்தப்பட்டன, மோட்டார்கள் எறிந்தன, தந்திக்கம்பிகள் அறுக்கப்பட்டன, தபாலாபீசுகள் தாக்குண்டன, டவுன்ஹால் தீயில் பொசுங்கிற்று, பல இலட்ச ரூபாய் நஷ்டம், என்று பத்திரிகைகளில் பத்தி பத்தியாக வெளிவரக் கண்டோம். காங்கிரஸ் தோழர்கள், குறிப்பாக, உணர்ச்சியால் உந்தப்பட்ட வாலிபர்கள், மனஎழுச்சியினால் தூண்டப்பட்ட மாணவர்கள், இவைகளை 'வெற்றிகள்' என்று கருதலாம், களிக்கலாம். நாம், கண் கசிந்து இதனை எழுதுகிறோம். இவைகளின் விளைவுகள் துப்பாக்கிப் பிரயோகமும், தடியடியும் பிறவும்! மாணவர்களே! இவை பெறவா, நீர் பள்ளி புகுந்தீர். பள்ளியிலே பெற்ற பயிற்சி இதற்கா பயன்படுகிறது. கொடுமைகள் எவை? கோளாறுகள் யாவை? அநீதி எங்கே எவ்வண்ணம் தாண்டவமாடுகிறது? என்பனவற்றைக் கண்டுணரவும், உணர்ந்தபின்னர் இத்தன்மையான முறைகளால் பயன்படுபவர் யாவர் என்பதனைத் தெரிந்துகொள்ளவும், தெரிந்து தெளிந்தபின்னர், இம்முறைகளை மாற்ற எவை செயல்சரி என்பதனை ஆராயவுமே, படிப்பு, பயிற்சி. நீவிரோ, ஒருவாரம், பத்து நாட்கள், பள்ளி பகிஷ்காரம், கடைகள் முன் நின்று கலவரம் விளைவித்தல், வீதிவலம்வருதல், கல்வீசுதல், பொதுஸ்தாபனங்களைத்தாக்குதல் ஆகியவை செய்யின், நாட்டுக்கு விமோசனம் கிடைக்கும் என்றுகருதி, வழிதவறிச்சென்று கஷ்டமடைகிறீர், உமது பெற்றோரைக் கலங்கவைக்கிறீர், நாட்டினர் நொந்திடச் செய்கிறீர், தோழரே! நீங்கள் பள்ளிபுக, பயில, உமது பெற்றோர் செலவிடும் பணம், உம்மிடம்பேசக் கூடுமானால், "என்னென்ன கூறும் தெரியுமோ! அவர் பட்டபாடு, கண்ட இடி, கொண்ட கஷ்டம், எவ்வளவு! நீவிரோ, அவையாவும் மறந்தீர், தெருவினிலே திரிந்தீர், பதட்டம் புரிந்தீர்! இதுமுறையோ?

தொழிலாளரே! உமது வாழ்க்கையின் வாட்டம் நாமறிந்ததே, உமது வாழ்வு நிலைஉயர, நீர்செய்யும் கிளர்ச்சிகள் காணும்போதும்கேட்கும்போதும் "அவர்மீது குறையில்லை, அவரை இந்நிலைக்குள்ளாக்கிய முறையே குறையுடைத்து" என்று கூறினோம். இன்றோ! பஞ்சம் பரவுகிறது, உணவுப்பொருள் விலைவாசி வக்கரித்துக் கொண்டிருக்கிறது, இந்நிலையிலே வேலை நிறுத்தம் செய்வது, உமது வாழ்வைத்தானே பாதிக்கும். ஏன்வீணில் வதைபட முற்படுகிறீர்! நெருப்பிலே வெந்து, நீரிலே ஆழ்ந்து, வியர்வை சொட்டச் சொட்ட வேலைசெய்து, கையே தலையணையாய் வானமே கூரையாய், மண்ணே மலரணையாய், வாட்டமே தோழனாய்க் கொண்டு வாடுதீர்! இத்தகைய நீவிர், காந்தீயக் கிளர்ச்சியிலே ஈடுபட்டு கண்ட தென்ன? வாழ்க்கை உயரக்கண்டீரா? இல்லையே! தழும்பு எழ எழத் தடியடி, இருதயத்திலிருந்து இரத்தம் பீறிட

துப்பாக்கிப் பிரயோகம் நடந்ததென்றால், யாருக்குத் தோழர்களே? சுயராஜ்யப் போர் என்றுரைத்திடும் பூசுரக்கூட்டத்துக்கா, உமக்கா? இதை எண்ணிடலாகாதா? தோழர்களே! மதுரையிலே நடந்த கலகத்தின் விளைவாக நேரிட்ட துப்பாக்கி பிரயோகத்திலேமாண்டவர் எவர் என்பதனைத் தெரிந்துகொண்டீரா? இதோ தகவல். படித்தறிமின். ஒரு **துரைசாமி நாயுடு** என்ற தமிழ் வாலிபர். **நாராயணப்பிள்ளை** என்ற ஒரு மலையாளி. அதுபோலவே ராஜபாளையத்திலே குண்டடிப்பட்டவர்கள், **கருப்பையா தேவர், பழனியாண்டிச் செட்டியார், பெருமாள் தும்பன்** என்பவர்களாம்.

நாயுடு, பிள்ளை, தேவர், செட்டியார், குடும்பர், என்னும் நம்மவருக்கே தொல்லைவந்தது. **எல்லாம் தமிழர்களே!**

பர்மா, மலாய் நாடுகளிலே ஜப்பான் குண்டுகளுக்கும்பர்மாக்காரரின் பகட்டத்துக்கும் ஆளாகி குடும்பம் கலகலத்து. குடல்நடுங்கி, கோவெனக்கதறி தாய்நாடுதிரும்ப, காடுமலை வனம் வனாந்திரங்களைக் கடந்து காட்டுமிருகங்களுக்கும் காட்டு மிராண்டி மனிதர்களுக்கும் தப்பி, இங்குவந்துள்ள இலட்சக் கணக்கான தோழர்கள் யார்? **தமிழர்!**

தேயிலை ரப்பர் தோட்டங்களிலே பாடுபட்டுக் கைகால் அலுத்து, காய்ச்சலும் கடுப்பும்கண்டு கலங்கி இன்று இங்கு வேலையுமின்றி வேதனையுடன் உள்ளவர் யார்? **தமிழரே!**

கோடிக்கணக்கானரூபாய்களை பர்மா, மலாயாவில் கொட்டி வியாபாரம் நடத்தி, இதுபோதும், உயிர் தப்பினால் போதும் என்று, சொத்துசுகம்விட்டு ஓடோடி இங்குவந்து, “கைமுதலும் போச்சே, கஷ்டப்படலாச்சே” என்று கதறும் தோழர்கள் யார்? **தமிழர்தான்!**

என்றும் கஷ்டம் தமிழருக்குத்தானே! இதை எண்ணிடக்கூடாதோ என்று தமிழ் மாணவரை, தமிழ்த் தொழிலாளரை, தமிழ் வியாபாரிகளைக் கேட்டுக் கொள்கிறோம்.

இன்று நடைபெறும் கிளர்ச்சியினால் நேரிடும் சங்கடமும் சஞ்சலமும், கஷ்டநஷ்டமும், பெரும்பாலும் தமிழர் தலைமீதே வந்து வடிகிறது. மதுரையிலே மண்ணிலே வீழ்ந்தவர் தமிழர்! மற்றும் அல்லல் வந்தது தமிழருக்கே!

வழக்கப்படி **அக்கிரகார வியாபாரம் குறைவின்றி** நடக்கிறது!

தோழர்களே! டவுன்ஹால் கொளுத்தப்பட்டது. ரயில்வே ஸ்டேஷன் எறிக்கப்பட்டது. ரயில்வே வண்டிகள் சாம்பலாயின. தபாலாபீஸ்கள் சூறையாடப்பட்டன. தந்திக்கம்பிகள் அறுபட்டன, வீடுகள்மீது கல் வீசப்பட்டன, மோட்டார் வண்டிகள் தகனம், என்று படிக்கிறீர்கள். இவைகள் எங்கே நடபெற்றன! எந்த வெள்ளைக்காரனை ஓட்ட போர் நடத்துவதாக கூறப்படுகிறதோ, அந்த வெள்ளைக்காரன் நாட்டிலல்ல! இங்கு! இதனால் பலஇலட்சம் செலவு, இந்தக் கிளர்ச்சியை அடக்கச் சர்க்கார் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளுக்காகப் பல இலட்சம் செலவு, இவ்வளவும் யாருக்கு? வெள்ளைக்காரருக்கா? இல்லை, தோழரே, நமக்கு! இடிந்த கட்டிடம் நம்முடையது, அதனைக் கட்டியது நம்முடைய பணத்தைக்கொண்டு இனி அதனைப் புதுப்பிக்க மீண்டும்நம்பணமே செலவிடப்படும்! இதனால் யாருக்கு நஷ்டம்? யாருக்கு வீண்செலவு? மக்கள் வரிப்பணத்திற்குத்தானே வீண்விரயம்? காலக்கோளாறு மிகுந்து, பணமுடை அதிகரித்து வாழ்க்கையை நடத்துவதே கஷ்டமாகி, பாட்டாளிகளாக, பரதவிக்கும் இந்தவேளையிலே, இத்தகைய வீண்விரயம் செய்வது விவேகமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம்.

தீமூட்டுவது, தெருக்கலகம், குத்துவெட்டு, துப்பாக்கிவேட்டு முதலியன கண்டு மக்கள் கலங்குகின்றனர். விமான படைஎடுப்பு, வெடிகுண்டு எரிகுண்டுவீச்சு, கோட்டை கொத்தளங்கள் இடிபடுதல், கும்பல் கும்பலாக மக்கள் மாளுதல், ஓடும் ரயிலின் மீது குண்டு வீசிக்கவிழ்த்தல், பறக்கும் விமானத்தைச் சுட்டுத்தள்ளுதல், மிதக்கும் கப்பல்கள் மீது குண்டுவீசி, மூழ்கடித்தல், போர்வீரர்கள் பிணமாதல், ஊர் தீப்பிடித்து மக்கள் குய்யோ முறையோ என்று கூக்குரலிட்டு, மகனைக் காணோமே மகளைக் காணோமே, என்று தவித்து, அப்பா, அம்மா, அண்ணா என்று கதறியும், ஐயோ, அப்பா, என்று பதைததும், அல்லோகல்லோலப்பட்டு ஓடும், களக்காட்சி உலகிலே இன்றுளது. இந்தியாவிலும் இத்தகைய கோரநிலைமை ஏற்படச் செய்யவேண்டும் என்பதே எதிரியின் எண்ணம். அச்சமயம், இன்று நடைபெறும் கலகமும் கூச்சலும், அலைகடல் மீதோர் துரும்பெனக்கருதப்படும்! அளவினதாகக் கொள்ளப்படும். அத்தகைய அவதிக்கும் தயாராக இருக்கவேண்டிய மக்கள், இன்று நடைபெறும் கலகத்தைக்கண்டுக் கலங்கிடத்தேவையில்லை. சென்றமாதம், நாடு இருந்த நிலை என்ன? மக்கள் பதைத்து நகரங்களைவிட்டுக் கிராமங்களுக்கும் ஓடினர். இன்றோ, நாளையோ, ஜப்பான் படைஎடுக்கப்போகிறது என்ற திகில் மக்களைப் பிடித்தாட்டிற்று. அதுபோல், ஏதேனும் படைஎடுப்பு நேரிட்டிருந்திருக்குமானால், எத்தனையோமடங்குஅதிகமான சங்கடத்திற்கும் சஞ்சலத்திற்கும் மக்கள் ஆளாகியிருந்திருப்பார்கள். எனவே, இன்று நேரிட்ட நடவடிக்கைகள் கண்டு நொந்திடுவதிற் பயனில்லை. இனியேனும், தோழர்கள், காலநிலை, கருமத்திலேகண் எனும் கோட்பாடுகளை அறிந்து, நம்கையைக்கொண்டே நம்கண்களைக் குத்திக்கொல்வதுபோல, நமது! நகரங்களை நாமே நாசஞ்செய்வது, நமது சொத்துக்களை நாமே அழிப்பது, நமது மக்களை நாமே பதைக்கச்செய்வதெனும், முறைகள் வேண்டாமென ஒதுக்கித்தள்ளி, இந்த உள்ள எழுச்சியை, உணர்ச்சியை, உத்வேகத்தை, எதிரியின் படைஎடுப்பு நேரிட்டால் அவனை விரட்டிவிட உபயோகிக்க வேண்டுகிறோம். ஆம்! தோழர்களே! ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை ஜப்பானியருக்கு எதிரிடையாக நடத்துவோம், ஜப்பானியர் நம் நாட்டிலே எங்கேனும் தங்கிடின், அந்தக்கட்டிடத்தைச் சுற்றிவளைத்துக்கொள்வோம். இடிப்போம், கொளுத்துவோம். ஜப்பானியரின் மோட்டார்கள்மீது கற்களை வீசுவோம், நொறுக்குவோம். ஜப்பானியரின் முகாம்கள் ஏற்படின் அவற்றிலே தீயிடுவோம் என்று உறுதிகொள்ள வேண்டுகிறோம். நமது உணர்ச்சியும் உத்வேகமும் அதற்காகத்திரட்டப்பட வேண்டுமேயொழிய, நமது நாட்டிலே நாமே ஓர் கொந்தளிப்பை உண்டாக்கப்பயன்படுத்துவது, தற்கொலைக் கொப்பாகும் என்பதை மறக்கக்கூடாது.

நாட்டிலே, இன்று வேகமான கிளர்ச்சியைத் தூண்டிவிடும் செயல், காங்கிரஸ் தலைவர்களுக்குக் களிப்பூட்டலாம். ஆனால், இந்த முறைதான், உரிமைகளைப்பெற அனுஷ்டிக்கப்படவேண்டும் போலும் என்று, நாட்டிலேஉள்ள நானாவிதமான இலட்சியக்காரரும் கருதுவதானால், நாட்டுக்கு 'எதிரியே வரத்தேவையில்லை. நாட்டுமக்களே ஒருவரை ஒருவர் வெட்டிமடித்துக்கொண்டுமாள நேரிடும்! பரிபூரண பொசுக்கல் ஏற்படும்! இது பிறகு, நோகாமல் நுழைய எதிரிக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். ‘பாரததேவி.’ எண்ஜாண் உடம்பு என்றேனும்வெந்து சாம்பலாகத்தானே போகிறது என்று எழுதி, தூபமிடுகிறது. எண்ஜாண் உடம்புக்குச் சிரசே பிரதானம்! சிரசிலே இருக்கவேண்டியது எதுவோ, அதற்குக் குழப்பம் விளைவித்துக்கொள்ளும் காரியம், நடப்பது, தேவியின் விருப்பம் போலும்! “இந்த காலித்தனம் இலட்சியத்துக்கும் காந்தியாரின் விருப்பத்திற்கும் மாறானது. இது

# போர்ப் பொறிகள்

## பெல்ஜியத்தைக் கொளுத்து

இரண்டாம்போர்முனை துவக்குவார்கள் என்ற கிலி ஹிட்லருக்குப் பிடிக்காமலில்லை. ஆகவே அவர், அச்சமயம், ஜெர்மன் துருப்புகள் பின்வாங்க நேரிட்டால், பெல்ஜியத்திலுள்ள சகல இடங்களையும், நகரங்களையும், கொளுத்திவிடும்படி தமது ராணுவ அதிகாரிகளுக்கு அனுப்பிய இரகசிய உத்திரவு ஒன்று, ஒரு உயர்தர ஜெர்மன் அதிகாரியிடமிருந்து கண்டுபிடித்து எடுக்கப்பட்டது.

## ஆளுக்கு 3 துப்பாக்கி

இரண்டாம் போர்முனைக்கு புறப்படும் நேசநாட்டுப்படைகள், ஆளுக்கு 3 துப்பாக்கி வீதம் எடுத்துவரவேண்டுமென்றும், இரண்டு துப்பாக்கிகளைபிரன்ச்சு மக்கள் பெற்றுக்கொண்டு, நேசநாட்டுப் படையுடன் கூடி, ஜெர்மனியரை எதிர்க்கத் துடித்துக் கொண்டிருக்கின்றனர் என்றும், பிரான்சிலிருந்து தப்பி பிரிட்டன் வந்துசேர்ந்துள்ள ஜாகீஸ் என்பார்தெரிவித்தார்.

## போதுமான துருப்புகள்

சிகாகோவிலிருந்து வெளியாகும் "சன்" என்ற பத்திரிகை, இப்போது பிரிட்டன் வந்து சேர்ந்துள்ள அமெரிக்கத்துருப்புககளைக் கணக்கிட்டால், இரண்டாம் போர்முனை ஏற்படுத்துவதற்கு வேண்டிய அளவு இருக்கிறது என்று எழுதுகிறது.

## நாலே நாட்களில்!

வெண்கடலிலிருந்து கருங்கடல்வரை விரித்துப் பரப்பும் அளவு கோட்டிங்துணியை பிரிட்டன் தயாரித்து, நாலே நாட்களில் ரஷியாவுக்கு அனுப்பி வைத்ததாக ஜெனரல் வென்னிங் என்பவர் கூறுகிறார்.

## பூச்செள.

பூச்செள என்ற நகரைத்தாக்கிய சீனப்படைகள், அவ்விடமிருந்த ஜப்பானியத் துருப்புகளை விரட்டியடித்தன.

## ஸ்டாலின் கிராட்.

ஸ்டாலின்கிராடைப் பிடிக்கப் பதைக்கும் ஜெர்மானியர், மேலும் பல புதுப்படைகளைக் கொண்டு வந்து குவித்துள்ளனர். போர் மிக மும்முரமாக நடக்கிறது, ஜெர்மன் டாங்கிகளைவிட ரஷிய டாங்கிகள் உயர்தரமானவை என்றபோதிலும், ஜெர்மன் டாங்கிகள் ஏராளமாக உள்ளன. டான் நதி வளைவிலே மேற்குப் பாகத்தைக் கைப்பற்ற நடக்கும் போர் மிக்க உக்கிரமாக இருக்கிறது.

## 120ம் மைலில்.

ஸ்டாலின் கிராடுக்கு 120ம் மைல் இப்புறத்தில் கோடில் நிக்வோ என்ற இடத்திலே மார்ஷல் டிமோஷெங்கோ தீரமாக எதிர்த்துநின்று போர்புரிகிறார். ஜெர்மன் சேனாதிபதி வான்பக் தமது துருப்புகளை, காகசசுக்குள் இழுத்துச்செல்வது, ஜெர்மானியருக்கே ஒருசமயம் ஆபத்தாக முடியவுங்கூடும் என்று ராய்ட்டர் நிருபர் கருதுகிறார். வோல்கா நதிக்கு அப்புறத்திலுள்ள ஏராளமான ரஷ்யத்துருப்புகளை கொண்டு வந்தால், ஜெர்மானியருக்குச் சங்கடம் விளைவிக்க முடியுமென்று கருதப்படுகிறது. வாரனேஷ் களத்திலே, சோவியத்துருப்புகள் தீரமாகநின்றுப் போரிட்டு ஜெர்மன் படைகளை விரட்டிவிட்டன.

---

க்கிற்கவேண்டும்" என்றுகூறி தோழர் ராஜகோபாலாச்சாரியார் ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார். இன்று அது, கலகக்காரரின் கண்களிலே படாது. வேகம் குறைந்து, வேதனைமிகுந்து, வீணுக்குச் செய்தோம் என்பதனை உணர்ந்து, மாணவர்களும் மற்றையோரும் அமரும்போது, ஆச்சாரியாரின் அறிக்கைபற்றி யோசிப்பர், சரியானதே அவர் கூறியது என்று தலையசைப்பர். சந்தடிமிக்க இந்தநேரத்திலே, இன்னம் எங்கெங்கே கலகம் நடந்தது என்று கேட்கவும் பேசவும் விரும்பவர் மக்கள். பின்னர், இதனால், நமது நாட்டுக்கு நாமே நலிவு தேடினோம் என்றுணருவர். அதுசமயம், மக்கள் நிச்சயமாக தூண்டிவிட்டவர்கள், தூபமிட்டவர்கள், தட்டிக்கொடுத்தவர்கள், தலைஉருண்டால் என்னதம்பி என்றுகூறி உசுப்பினவர்கள், இன்னம் இரண்டோர் இடங்களிலே கலகமூட்டு என்றவினர்கள், சபாஷ்கூறிக் கைகொட்டினவர்கள், ஆகியோர்மீது குற்றம் சாட்டுவர். சரிதத்திலே இந்தச் சம்பவம், மாணவர்களின் உணர்ச்சியையும் தொழிலாளரின் உத்வேகத்தையும், தூண்டிவிட்டு மிக்க நெருக்கடியான நேரத்திலே மிக மோசமான கலகத்தைத் தூண்டினர் தோற்றனர் என்றே எழுதப்படும்.

எனவே இத்தகைய வீண்கலவரத்திலே ஈடுபடாது, ஒதுங்கி நிற்கும்படி திராவிடத்தோழர்களைக் கேட்டுக்கொள்கிறோம். நரியூரைக்கண்டு பயந்து புலியூர் செல்வதோ! நமது வீட்டிலே தொசுகும் பிறவும் இருப்பதைப்போக்க வீட்டைக் கொளுத்துவதோ! எண்ணிப்பார்க்கட்டும் தோழர்கள்! இன்றளவுவரை நடைபெற்ற கலவரத்தினால், சுயராஜ்யத்தின் பாதையைவிட்டு சுயஅழிவுப் பாதைக்கே நாம் வந்திருக்கிறோம் என்பதைத் தோழர்கள் உணர வேண்டுகிறோம், அடக்குமுறையை விசச்சர்க்காருக்குச் சந்தர்ப்பங்களை உண்டாக்குவதன் மூலம், நாட்டிலே மேலும் பல சங்கடங்களை உண்டாக்கமுடியுமே தவிர, மக்களுக்கு மேலும் பலப்பல கஷ்டங்களை விளைவிக்கமுடியுமே தவிர, இன்று கிளர்ச்சி நெருப்புக்குத் தமது உடலை விறகுகளாக்குவோம், செந்நீரை நெய்யாக்குவோம் என்று வீரம்பேசும் மக்கள், காணப்போவது ஒன்றுமில்லை. ஓமகுண்டத்தைச் சுற்றி உட்கார்ந்து கொண்டுள்ள ஆரியத்தலைவர்களே பயன்பெறுவர், பிறகு.

தோழர்களே, உங்களின் தழும்புகள் மறையாது, அதைத் தடவுந்தோறும் தடவுந்தோறும், நாட்டு விடுதலைக்காக நாம் நடத்திய கிளர்ச்சியிலே பட்ட அடி இது என்று எண்ணி நீங்கள் மகிழ்வீர். ஆனால் இந்தத் தழும்புகளைக்காட்டி, துப்பாக்கி வேட்டு பாய்ந்த மக்களின் கணக்கைக் காட்டி, கருகிய கட்டிடங்களைக் காட்டி, ஆரியத்தலைவர்களே பிறகு, ஆளுக்குக் கொஞ்சம் என்று அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொள்வர். இன்று நடைபெறும் அடக்கு முறைகளை அவர்கள் நொடியில் மறப்பர், வெள்ளையருடன் குதூகலமாகக் கை குலுக்குவர்.

"துப்பாக்கியிலே குண்டு இருக்கும் வரையில் சுட்டேன்" என்று கூறிய டயரின் கொடுமைபற்றி அவர்கள் பேசினரே தவிர, பிறகு, மந்திரிப்பதவிகள் கிடைத்தபோது, பஞ்சாப் படுகொலையை மறந்து, வெள்ளையருடன் உல்லாசமாகக் காலங்கழித்தனர் என்பதை மறக்கவேண்டாம். நீங்கள் சிந்தும் இரத்தம், ஆரியருக்கே அதிகார அபிஷேக நீராகப்போகிறது, இதை அறிமின்.

இயக்கம் சரியான வழியிலே செல்லாது, பலாத்காரச் செயல் மிகுந்துவிட்டால், என்னை உயிருடன் காணமுடியாது என்று காந்தியார் கூறிப்போந்தார். அவர் அன்பர்கள் பலாத்காரச் செயலில் இறங்குவது சரியா! இதை யோசியுங்கள்.

இஞ்சிபத்தனே மேல்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

உள்ள பரமபிதாவின் மண்டலத்திலே, இது நடக்கிறது. நடந்ததா என்று என்னைத் திருப்பிக்கேட்க வேண்டாம். நான் கண்டேனில்லை. மானிடரிலே இவைகளைக் கண்டோரில்லை, கண்டோர் விண்டதுமில்லை, விண்டோர் கண்டதுமில்லை! நடந்ததாகப் புராணம், நாட்டிலே இருக்கிறது, படிக்கின்றனர், பரம பக்திமான்கள் இதனை ரசிக்கின்றனர், பூரிக்கின்றனர், என்னே அவர்பெருமை! என்று தொழுகின்றனர்.

காட்டிலேதிரியும் கள்ளர் கூட்டத்திலே, ஒருவர் தலையை ஒருவர் அறிவாளால் வெட்டுகின்றனர், கொல்லைச்சண்டை, கொண்டைக்காரியிடம் கொல்லையிலே கோழிகூவும் நேரத்திலே பேசியதால் வந்த சண்டை, வரப்பு வாய்க்கால் சண்டை, முதலியவற்றிலே தலை உருளக்கேட்டிருக்கிறோம். அத்தகையவர்களை,க் காட்டுமிராண்டிகள் என்று தூற்றுகிறோம், கசடர்கள் என்று ஏசுகிறோம், கொலைபுரியும் கொடுமையாளர்கள் என்று கண்டிக்கிறோம், நல்லறிவும் நன்னெறியுமற்றவர்கள் என்று பேசுகிறோம். சட்டம் தண்டிக்கிறது. இதோ, புராணத்தின் படிபார்த்தால், சிருஷ்டிகர்த்தாவின் சிரத்தைச் சின்மயானந்த சொரூபி கிள்ளி எறிகிறார்! நமது கடவுள்களின் இலட்சணம் இதுவென்று புராணீகர்கள் தீட்ட, அதனைக்கேட்ட, காதுகளை, என்ன ஊற்றிக்கழுவிச் சுத்தம் செய்வது, கூறுங்கள். நமது நல்ல வேளைதானே இத்தகைய கோரம் குதிக்கும் இடத்திலே இல்லாது, கொலை கொல்லை, களவு முதலியன புற்றில் அடங்கி இருக்கும் பாம்புபோல் பதுங்கிக்கொண்டுள்ள இடத்திலே இருக்கிறோம், என்று நான் எண்ணி மகிழ்வதுண்டு. ஒரு நாரதரிடம் நாம் சிக்கிக்கொண்டால் எவ்வளவு பாடுபட்டிருப்போம் எவ்வளவு பாடுபட்டார்கள் தேவர்களும் மூவரும், அந்த பிரம்மச்சாரியின் கலக சுபாவத்தால்! ஆஸ்ரமத்திலே இருக்கும் அகலிகையை, இந்திரன் கற்பழித்ததும், அதற்காகக் கோழியுருக்கொண்டு கூவியதும் பின்னர், உடலெங்கும் யோனியாகுக என்று முனிவர் சாபமிட முழித்ததும், பின்னர் உனக்குமட்டுமே அந்தக்கோரம் தெரியும், மற்றவருக்கு நீ ஆயிரங்கண்ணுடையோனாகவே இருப்பாய் என்று மாற்று பெற்றதுமாகிய கதைகளைப் படிக்கும் போது, எவ்வளவோ, மேலப்பா, இந்த லோகம், இங்கே உடைக்கோ, மனைவிக்கோ, ஊருக்கோ, பேருக்கோ, இத்தனை பெரியவர்கள் இத்தகைய ஆபத்து வருவதில்லை, என்று எண்ணி திருப்தி அடையாமலிருக்கமுடியுமா, கூறட்டும் நமது ஆத்தீக ஆழியிலே அனுதினம் மூழ்கிடும் அன்பர் குழாங்கள்.

தேவலோக விஷயமாகக் கூறவந்தது, கண்ணகி கதைக்கு மூலமாக, இளங்கோவன் தீட்டியதை எடுத்துரைக்கத் தொடங்கியதால், மேலே கூறுவோம் கேளுங்கள். சிவனாரின் தாண்டவத்தைக் கண்டு பொறாமை கொண்ட பார்வதியார், "நிறுத்து உன் நர்த்தனத்தை" என்று சீறுகிறார். சிவனார் ஏன்? என்று கேட்கிறார். பேச்சு முற்றுகிறது. "சரி! சக்தி பெரிதா? சிவன் பெரிதா? என்று உமை உக்கிரத்தோடு கேட்கிறார்.

பாருங்கள் தோழர்களே! ஆண்டவன் குடும்பத்திலே சதிபதி ஒற்றுமை இருக்கும் விதத்தை! யார் பெரியவர்கள் என்ற சண்டை நடக்கிறது, சகலமும் உணர்ந்தவரின் சன்னதியிலே.

சக்திதான் பெரிது! சிவமே பெரிது! இல்லை சக்திதான் பெரிது! இல்லை, இல்லை, சிவமே பெரிது! என்று சம்வாதம் நடக்கிறது. கோபச்சிரிப்பு வேறு! முடிவில், "ஏ! சக்தீ! ஆணவத்தால் என்னை அவமதித்தாய். நீ பூலோகத்திலே பிறந்து படாதபாடு பட்டு. பிறகு நம்மை வந்தடைவாய்" என்று சிவனார், சக்தியைத் தேசப்பிரஷ்டம் செய்கிறார். அந்த சக்திதான், கண்ணகி! இது இளங்கோவனின் கதை, இளங்கோவனுடையதல்ல! இது சினிமா அதிகாரம்! சிலப்பதிகாரமல்ல! இது சிந்தனைக்குத் தேவையானதா, சிவசக்தி இலட்சண விளக்கத்துக்கு அவசியமா, பகுத்தறிவுக்கு ஏற்றதா, பாமரரின் அறிவுக்கு விருந்தா, அன்றி அவர்களுக்கு அபினா, என்பதை அன்பர்களே, யோசித்துப்பாருங்கள்.

கண்ணகி பல கஷ்டமனுபவித்து, பாண்டியனை மாளச்செய்து, மதுரையை தீப்பிடிக்கச்செய்து, ஓய்ந்து நிற்கையிலே, சிவனார் கூப்பிடுகிறார், "சக்தி! ஏ! சக்தி!" என்று கண்ணகி விழிக்க, சிவனார் விளக்க, பின்னர் சக்தி உருப்பெற்று, தன் தவறை உணருகிறாள் சக்தி, கண்ணகி உருவத்தை உலகோர் மறவாதிருக்க, சிவனார், சிலையாக்கி, "இதனை உலகோர்பத்தினிக்கடவுளாகக்கொண்டு வணங்குவாராக" என்று கட்டளைபிறப்பிக்கிறார். ஆரம்பத்திலே சக்தி சிவசம்வாதம் என்ற புரா்ண ஆபாசத்தை இளங்கோவன் தீட்டவே, இறுதியிலும் ஆபாசத்துடனேயே முடிக்க வேண்டி நேரிட்டுவிடுகிறது. இடையிலேயும் இதனால், மாதவியைப்பிரித்து கோவலன், கண்ணகியிடம் வந்து சேர்ந்ததும், கண்ணகி கணவனைத்தொடவும் கூடாது என்று "தீண்டினால் திருநீலகண்டம்" என்றுகூறிவிடுகிறான் கோவலன்! ஏன்? சக்தியே கண்ணகியாகத் தோன்றுவதாகக் கதைதுவக்கியதால், கைபடாத பத்தினியாகவே இருக்கச்செய்யவேண்டிய பொறுப்பும், கடைசியில், சிவனாரிடம் சக்தியாகப் போய்ச் சேரச் செய்யும்பொறுப்பும் கதை எழுதினோருக்கு ஏற்பட்டது! சேற்றிலே கால்வைத்தால், கழுவித்தானே தீரவேண்டும். செந்தேளைத் தீண்டினால், அது கொட்டித்தானே தீரும். அதுபோல், புராண ஆபாசத்திலே துவக்கினார், எனவே புராண ஆபாசத்துடனேயே முடிக்கவேண்டி நேரிடுகிறது. இளங்கோவடிகளின் செம்பொன்னை இளங்கோவன் பித்தளையாக்கித் தருகிறார் என்று நான் கூறினதிலே தவறு, கூறுங்கள் கேட்போம்.

ஏன், கதையை இப்படி கோணலாக்கினார்கள்? சிலப்பதிகார ஆசிரியரின் சிந்தனையிலே கோளாறு கண்டுபிடித்து அதனைச் செம்மைப்படுத்த சிவலோகநாதனைப் பிடித்திழுத்து வைக்கவேண்டிய காரணம் என்ன? என்று கேட்பீர்கள். அதனை அறிய, ஆதியை விட அந்தத்திலிருந்து ஆரம்பிக்கவேண்டும் அன்பர்களே.

நான் கூறினேன், கதையின் கடைசி கட்டத்திலே, சிவனார் தோன்றி, சக்தியை மன்னித்து கண்ணகிச் சிலையைத் தமது கடாட்சத்தால் உண்டாக்குவித்தார் என்று அந்தக் கட்டத்திலே இருக்கிறது சூட்சமம்! இங்கு இளங்கோவன், கலைக்கொலை மட்டுமல்ல இனக்கொலை செய்கிறார். அ லை த எண்ணும் போது இருதயம் துடிக்கிறது. கண்ணகியின் சிலை, ஏற்பட்டவிதம் என்ன, இலக்கியச் சான்றுப்படி? இளங்கோவன் எழுத்தின்படி எண்ணம்வேறு அவரது எழுத்துவேறு, சிலையைச் சிவனார் சிருஷ்டிக்கிறார். ஆனால், செந்தமிழ் பயின்றவரனைவரும் அறிவர், கண்ணகியின் வரலாற்றினைக் கேள்விப்பட்ட இளங்கோவடிகள் நூல் இயற்ற, இளங்கோவடிகளின் சகோதரர், சேரன் செங்குட்டுவன், அத்தகைய பத்தினிக்குக் கோயில் கட்டுவேன், சிலை அமைப்பேன் என்று கூறி, சிலைக்குக்கல் இமயத்திலெடுப்பேன் என்றுரைத்து இமயம் சென்று ஆங்கு :எதிர்த்த **கனகவிசயன்** எனும் ஆரிய மன்னர்களைப் போரிலே வென்று, அவர்களின் தலைமீது கல்கொணர்ந்து, பத்தினிக்குச் சிலையும் கோயிலும் அமைத்தான் என்பதை திராவிட மன்னன், திராவிடப் பெண்மணியின் திராவிடக் குணத்தை உலகு உணரட்டும் என்பதற்காகக் கோயிலமைக்க, ஆரிய மன்னரை முறியடித்து, அவர் தலைமீது கல்லை ஏற்றிக்கொண்டு வந்தான் என்ற இந்த இனச்சிறப்பை

மறைக்க, மக்கள் தெரிந்துகொள்ளாதிருக்க, தெரிந்த சிலரும் திகைக்க, சில சிவனர் செய்தார், காரணம் சக்தியே கண்ணகியாக அவதரித்தது என்று புனை சுருட்டு புகுத்தப் பட்டிருக்கிறது. தோழர்களே இது கலைக்கொலையாக மட்டுமிருப்பின், தெரிந்தது அது தான் போலும் என்று பரிதாபப்பட்டு இருப்பேன், இலக்கியக் கொலையாக மட்டுமிருப்பின் இதற்குமேல் எதிர்பார்க்க முடியாது என்றெண்ணிச் சும்மா இருப்பேன், இது இனக்கொலை! திராவிடர் ஆரியர் என்ற இனப்பாகுபாடு, பூர்வகாலப்போர், திராவிடமேம்பாடு ஆகியவற்றை வேண்டுமென்றே மறைக்கச் செய்யும் சதி! இதனைத் தமிழகம் தாங்குவதா! 'இலக்கியம் கற்றோரே. சிலப்பதிகார ஆராய்ச்சியாளரே! சிந்தனைக்குச் சற்றே வேலை கொடுங்கள், இந்தச் சித்திரவதைக்கு நீங்கள் உடந்தையா? கண்டும் கேட்க மறுக்கும் போக்கு உதவுமா? எதற்காகச் சிலசெய்த வரலாற்றை இங்ஙனம் தலைகீழாக மாற்றுவது என் இந்தத் தெகிடுதத்தம்? கேட்பார் இல்லையா? இந்நாட்டிலே இலக்கியக் காப்பாளர் எதெதற்கோ எவரெவர் மீதோ சீறுகின்றனரே, சிலப்பதிகாரத்தை இந்தச் சித்திரவதை செய்திருப்பதைக் கண்டு, சீற்றம் எழ வேண்டாமா? செந்தமிழ் நாட்டவரின் சிறப்புக்கு இத்தகைய பங்கம் விளைவிக்கத்துணியும் செயலைக் கண்டிக்க முன்வர வேண்டாமா? தமிழர் இல்லையா, தமிழகத்தில்! சிலப்பதிகாரத்தை அப்படியே படம் எடுக்க முடியுமா, சிற்சில மாற்றங்கள் சினிமாவுக்கேற்றபடி செய்யவேண்டாமாஎன்று வாதிடுவர். மாற்றம் தேவை என்பதை நான்ஏற்றுக்கொள்கிறேன். ஆனால்எத்தகைய மாற்றம் தேவை! இஞ்சிபத்தன் செய்வது போன்ற மாற்றமா! என்ன ஆச்சரியம்! என்று இஞ்சிபத்தன் அடிக்கடி கூறக்கேட்டேன் காட்சியிலே. இஞ்சிபத்தனை வந்த தோழர் N. S. கிருஷ்ணன். இதனைச் சிலப்பதிகாரத்தைத் தழுவியது என்றும், தீட்டியவர் பெயர் இளங்கோவன் என்றும் விளம்பரம் செய்கிறார்களே, இது என்ன ஆச்சரியம்! என்று கூறவில்லையே தவிர அவர் மனதிலே அதே எண்ணந்தான் இருந்திருக்கும் என்று எண்ணுகிறேன்.

பழையகாவியம், சரிதம்ஆகியவற்றை த்திரைக்கு ஏற்றபடி மாற்றிக்கொள்வதை நான் தவறென்று கூறுபவனல்ல. கண்ணகி படத்திலேயே, இஞ்சிபத்தன் காமிக் செருகல். ஆனால், அதன் சோபிதம் படத்தின் வெற்றிக்குக் காரணமாக இருக்கிறது. அறிவுக்குப் பொருத்தமான மூலக்கருத்துக்கு மாறுகவில்லாததனை சுருத்தாகவோ, விளக்கமாகவோ, இருக்கும் கருத்தை புகுத்திஅதற்கேற்ற காட்சிகளை அமைப்பதைநான்வரவேற்கிறேன். மூலக்கருத்தையேகொலைசெய்யும் விதத்திலே மாற்றம் இருப்பது, அடாத செயலென்பேன். இளங்கோவடிகள், ஒரு பத்தினியின் பெருங்குணத்தை ஒரு பரத்தையின் காதல் மகத்துவத்தை, ஒரு வணிகனின் வாழ்க்கையில் பலமாற்றங்களை, ஒரு வஞ்சகனின் மோசத்தை ஒரு மன்னனின் அவசரத்தை விளக்குகிறார், :சிலப்பதிகார மூலம். கண்ணகி கதையிலே இந்த மூலமே முறியடிக்கப்பட்டு, இவ்வளவும், கைலாயத்திலே நேரிட்ட சிவ சக்தி சம்வாதத்தால் வந்த தொல்லை என்று முடிக்கிறார், இளங்கோவன் ஜூனியர்! இது சரியா, முறையா! தகுமா? என்று கேட்கிறேன்.

அதிலும் சிலை உண்டான விதம்பற்றி அவர் திரித்திருப்பதைத் தமிழ் உணர்ச்சியுள்ள யாரும் மன்னிக்க மாட்டார்கள்.

(5ம் பக்கம் பார்க்க)


## பாஷா சாஹிப் என்கிற B. சையத் காசிம் சாஹிப்,

ஷராப் & நகை வியாபாரம், பெரிய காஞ்சிபுரம்.

நீண்டகாலமாக நாணயமும் நம்பிக்கையும்பொது ஜன நன் மதிப்பும் பெற்றது. எமது கடையில் தற்காலத்திற்கேற்ற புதிய மாதிரி சவரப்பொன் ஆபரணங்களும் வேலைப்பாடு அமைந்த கல்லாத் தினுசு வெள்ளிச் சாமான்களும், பஜார் விலைக்குக்கூடுமான வரை சகாயமாகவும் உத்தரவாதத்துடனும் கிடைக்கும்.




சகோதர சகோதரிகளுக்கு, தேவையான எல்லா விதமான ஆபரணங்களையும் குறித்த காலத்தில் குறைந்த கூலியில் சிறந்த முறையில் அனுபவம் வாய்ந்த தொழிலாளரைக் கொண்டு தயாரித்துக்கொடுக்கப் படும்.

தயவு செய்து ஒருமுறை ஆர்டர் கொடுத்து உண்மையை உணரவும்.


Printed at the United Printing Works, Hodgsorpet Conjeeveram.
and Published by C. N. Annadurai, M. A. at 51, Nimanthakara Street, L. Conjeeveram.